புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# சிலப்பதிகாரத்தில் ஆடற்கலை

முனைவர் மு.லோகநாயகி,
கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யார் - 604407.

*முன்னுரை:*

*சங்கம் மருவிய காலம், களப்பிரர் காலம் என்றெல்லாம் அழைக்கப்படும் கி.பி.250க்கும் கி.பி.550க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய ஆடற்கலையை அறிய சிலப்பதிகாரம் உதவுகிறது. ஆடற்கலை என்பது ஒரு வரலாறு மட்டுமல்ல, அது சமயம், தத்துவம், இலக்கியம் இவற்றோடு பின்னிப் பிணைக்கப்பட்டதாகும். கி.பி.முதலாம் நூற்றாண்டில் பரதர் நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். அதன்பின் வந்த சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நாட்டியக் கலை பரதரின் நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். பரதரின் நாட்டிய சாஸ்திரத்தையும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நாட்டியக் கலை ஒத்திருப்பது சிறப்புக்குரியதாகும். அந்த வகையில் சிலப்பதிகாரத்தில் ஆடற்கலைகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

*ஆய்வுச் சுருக்கம்:*

*ஆடற்கலை எப்பொழுது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அந்த அளவிற்கு ஆடற்கலை மிகவும் பழமை வாய்ந்ததாகும். குறிஞ்சி நில மக்களிடையே பயின்று வந்த கூத்து குரவைக் கூத்து என்று அழைத்தனர். இது மலைப் பிரதேசங்களில் ஆடுகின்ற மலை நடனம் என அழைப்பர். கூத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக ஆடற்கலை விளங்குகிறது. ஆடல், பாடல், இசை இந்த மூன்று கலைகளும் கூத்தில் வருவது சிறப்பாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆடற்கலை சிலப்பதிகாரத்தின் வழியே ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*நாட்டியக்கலை:*

*ஆடியும் பாடியும் உள்ளக்குறிப்பைப் புறத்துக்காட்டும் திறமையோடு மெய்ப்பாடுகள் தோன்ற நடித்தும் வந்த மகளிர் விறலியர் என்று அழைக்கப்பட்டனர். இத்தகைய விறலியரையும் கூத்தரையும் தமிழ் மன்னர்கள் பெரிதும் ஆதரித்தனர். சிறந்தவருக்கு தலைக்கோல் என்ற பட்டத்தையும் தந்து சிறப்பித்தனர்.*

*"நடனம் அல்லது ஆடல் மனிதனுக்கு இயல்பான வெளிப்பாடுகளில் ஒன்று. ஆடலைக் கூத்து என்றும் நாடகத்தை கதை தழுவி வரும் கூத்து என்றும் கூறுவர்" (ஆறு.அழகப்பன், தமிழ்ப் பேழை, ப. 276, திருவரசு புத்தக நிலையம், சென்னை, மு.ப.2001)*

*ஆடற்கலை என்பது உடலசைவின் வெளிப்பாடுகளை கொண்டதாகும். சங்க இலக்கியங்களில் ஆடல் மகளிர் இருந்ததாக செய்திகள் காணப்படுகின்றன. ஆடல் இன்று கலையாக உருவெடுத்து மக்களின் உள்ளங்களை மகிழ்விக்கிறது. ஆடல் என்பது இன்று முறையாகப் பாடக் கற்பிக்கும் நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளது. இசை, பாடல் இவற்றை அடிப்படையாக வைத்து ஆடல் பயிற்றுவிக்கப்படுகிறது.*

ஆடற்கலைகள் நாட்டுப் புறங்களில் கரகாட்டம், காவடி ஆட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, மரக்கால், கிழவன் கிழவி ஆட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம் போன்ற பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

நடன ஆசிரியரின் இலக்கணம் - நடனத்தின் தொடக்கம்:

நடனக் கலையைத் தொடங்கும் போது தண்டியம் பிடிப்பித்தல் என்பது நடனப் பாடத்தின் தொடக்கத்தில் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்கு. தண்டியக் கோலை நட்டு மஞ்சளும் நறுமணம் கமழும் சந்தனமும் பூசி பூவும் பொட்டும் வைத்து தரையில் வீழ்ந்து வணங்கி நறும்புகையும் தூபமும் காட்டி வழிபட்டு தெய்வ சின்னமாகிய தண்டியத்திடம் அருள் பெற்று நடனக் கலையைப் பயிற்றுவிக்க நடன ஆசான் தொடங்குவான். இந்த தண்டியத்தை நடனமாடும் நங்கையும் நடனயாழ், முழவு ஆசான்களும் தொட்டு கையில் பற்றி வணங்குவார்கள்.

"ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும்
கூடிய நெறியின் கொளுத்துங்காலைப்
பிண்டியும் பிணையலும் எழிற்கையும் தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்"

(சிலம்பு, அரங்கேற்று காதை, வரி.16-20)

என்று சிலப்பதிகாரம் இலக்கணம் கூறுகிறது.

பதினொரு கூத்துக்களையும் அவற்றின் பல்வேறு கூறுபாடுகளையும் நன்குணர்ந்தவன் ஆடலாசிரியன். பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை என்னும் நான்கின்திறம் தெரிந்தவன். இருவகைக் கூத்தும் நிகழுமிடத்து கூடைக்கதியாக செய்ததை, வாரக் கதியுள் செல்லாமல் விலக்கவும் வாரக்கதியில் செய்தானாக கூடைக்கதியுள் செல்லாமல் விலக்கவும் பிண்டி செய்தகை, ஆடலில் செல்லாமல் விலக்கவும் வல்லவன். குரவைக் கூத்தும் வரிக்கூத்தும் ஒன்றுடன் ஒன்று கலவாதவாறு பயிற்றுவிப்பவன் என்று நடன ஆசிரியரின் இலக்கணத்தைக் கூறுவதைக் காணலாம்.

நாட்டிய அரங்க அமைப்பு:

தரையிலிருந்து மேடை ஒரு கோல் அளவினதாக இருந்தது. அதன் அகலம் ஏழு கோல் அளவு என்றும், நீளம் எட்டுக் கோல் அளவு என்றும் உயரம் நான்கு கோல் அளவு என்றும் கூறப்பட்டன. திரைச்சீலைகள் ஒருமுக எழினி, எதிர்முக எழினி, கரந்துவரல் எழினி என்று மூன்று வகை அமைக்கப்பட்டன.

"மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருபத்து நால்விர லாக"

(சிலம்பு, அரங்றே;று காதை, பா.வரி. 95-100)

அரங்கம் அமைப்பதற்கு பழுதற்ற ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். பின் பொதிய மலை முதலான புண்ணிய மலைச் சாரலில் ஒரு கணுவுக்கும் மற்றோரு கணுவுக்கும் இடையில் ஒரு சாண் இடைவெளியுடன் ஓங்கி வளர்ந்த மூங்கில்களை வெட்டிக் கொண்டுவந்து நூல் நெறிபாடி உத்தமனின் கைப்பெருவிரல் இருபத்து நான்கு கொண்ட அளவு இருக்குமாறு அம்மூங்கிலைத் துண்டு செய்தனர். அதனையே அரங்கம் அளக்கும் கோலாகக் கொண்டனர்.

"எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத் துறுப்பின தாகி
உத்தரப் பலகையோ மரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோ லாக
ஏற்றவாயில் இரண்டுடன் பொலியத்" (சிலம்பு, அரங்றே;று காதை, பா.வரி. 101-105)

அரங்கில் உள்ளே செல்லவும் வெளியே வரவும் இரு வாயில்கள் அமைத்தனர் என்று அரங்க அமைப்பு பற்றிக் கூறுவதைக் காணமுடிகிறது.

*"ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்*
*கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வருத்தாங்கு*
*ஓவியவிதானத் துரைபெறு நித்திலத்து*
*மாலைத் தாமம் வளையுடன் நாற்றி*
*விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கத்துப்*
*பேரிசைமன்னர் பெயர் புறத் தெடுத்த"*

*(சிலம்பு, அரங்றே;று காதை, பா.வரி. 109-114)*

*தூண்களின் நிழல் அரங்கிலும் அவையிலும் விழாதவாறு பெருமை மிக்கநிலை விளக்குகளை ஏற்ற இடங்களில் வைத்தனர். பின் உருவு திரையாக ஒரு முக எழினியையும் பொருமுக எழினியையும் கரந்து வரல் எழினியையும் வேலைப்பாடுடன் அமைத்தனர். ஓவியத்துடன் கூடிய மேல் விதானமும் அமைத்தனர். புகழ்மிக்க முத்து மாலைகளான சரியும், தூக்கும், தாமமும் என்னும் இவற்றை எங்கும் அழகுபடத் தொங்கவிட்டனர். இவ்வாறு புதுமையுடன் நடன அரங்கத்தை அமைத்தனர்.*

*நாட்டியத்தின் வகை:*

*சாந்தி கூத்து, வினோத கூத்து என கூத்து இருவகைப்படும். மேலும் சாந்தி கூத்து நான்குவகைப்படும். அவையாவன சொர்க்கம், மெய்க்கூத்து, அபிநயக்கூத்து, விநோதக்கூத்து, குரவை, கலிநடம், குடக்கூத்து, தோற்பாவை என பல வகைப்படும்.*

*சிலப்பதிகாரம் நாட்டியம் வகைப்பற்றிக் கூறுகிறது. நாட்டியம் இருவகைப்படும். ஒன்று தேசி மற்றொன்று வடுக என்பதாகும். நாட்டியம் அரசர்களுக்காக மட்டும் இடம் பெறும்பொழுது வேத்தியல் என்றும் மற்றவர்களுக்காக இடம் பெறுவது பொதுவியல் என்றும் வழங்கப்பட்டது.*

*"இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து*
*பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்"*

*(சிலம்பு, அரங்றே;று காதை, பா.வரி. 12-13)*

*என அகக்கூத்து, புறக்கூத்து என்று இருவகைக்கூத்து என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆடல் ஆசிரியன் என்பவர் இந்த இருவகைக் கூத்தையும் அறிந்திருக்க வேண்டும் என்று பகர்கிறது. அகக்கூத்து என்பது வீட்டுக்குள் ஆடப்படும் வரிக்கூத்தாகும். புறக்கூத்து என்பது பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறுவது எனவகைப்படுத்தப்படுகிறது.*

*குரவைக்கூத்து:*

*குரவைக்கூத்து பொழுதுப் போக்கிற்க்காக மலை விளையாட்டாகக் குறமகளிரால் ஆடப்படுவது. ஆரம்ப நிலையிலிருந்தே தினைப் புனங்களில் பறவைக்குப் பயன்படுத்திய தொண்டகச் சிறுபறை இசையைப் பின்னணியாகக் கொண்டு குரவைகூத்து ஆடப்பட்டது.*

*தொண்டகப் பறை முழங்கத் தாளம் தவறாமல் குரவை ஆடினர். தாளம் தவறாமல் ஆடப்பட்ட காரணத்தால் குரவை ஆடுதல், குரவை அயர்தல் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.*

*"வியல் அறை வரிக்கும் முன்றில் குறவர்*
*மனைமுதிர் மகளிரொடு குரவை குறவர்"*

*(அகம், பா.232)*

*அகன்ற பாறைகளால் ஆன முற்றத்தினை அழகு செய்யும் முற்றத்திலே குறவர்கள் தம் வீட்டில் உள்ள ஆடுகளத்தில் முதிர்ச்சி பெற்ற மகளிரொடு குரவை கூத்து ஆடினர் என்று அகநானூறு கூறுகிறது.*

*குரவை பாடிய பெண்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஆடுவது குரவைக் கூத்தின் பண்புகளுள் ஒன்று. இதனால் குரவைக்கூத்து பிணையூஉ, தழூஉ என்று வழங்கப்பட்டது.*

*"சீர்மிகு நெடுவேட் பேணி தழூஉர் பிணையூஉ*
*மன்று தொறும் நின்ற குரவை"*

*(மதுரைக்காஞ்சி, வரி. 614-15)*

*கார்காலத்தில் மலரும் குறிஞ்சிப்பூவைச் சூடி கடம்பு அணிதலால் மகளிர்தம் முன் தழுவிக் கைக்கோத்து மன்றுகள் தோறும் குரவைக் கூத்தாடுவர்.*

*“குறிஞ்சி நிலத்து மக்களிடையே தோன்றி பிற நிலத்து மக்களிடையேயும் பயின்றுவந்த கூத்து குரவைக்கூத்தாகும். குறவர் + அவை = குறவை – குரவை எனத்திரிந்து குரவைக்கூத்து எய்திய பல நிலைகள் நீர்மைபெற்று சிலம்பு காலத்தில் செம்மை வடிவம் அடைந்த பான்மையைக் காணலாம்” (தமிழர் கூத்துகள், பக். 33-34) என்ற கூற்று இங்கு எண்ணத்தக்கது.*

*குறவர் தமது தெய்வ வழிபாட்டு முறைப்படி செவ்வேளை துதித்து பாடியாடினர். வேலனின் பிறப்பு, சூரபத்மனை வதம் செய்தது, தலைவி வேலவனுக்காக ஏங்கியது ஆகியவற்றை குறவர்கள் பாடிஆடினார்கள்.*

*“சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்*
*ஏரமுகம் நீங்கா இறைவன்கை வேலன்றே*
*பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொரு நாள்*
*சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே”*

*(சிலம்பு, குன்றக் குரவை, பா. 7)*

*திருச்செந்தூர், திருச்செங்கோடு, சுவாமிமலை, திருவேரகம் ஆகிய இடங்களில் எப்பொழும் நீங்காது இருப்பவனான முருகப்பெருமான் உலகைச் சூழ்ந்துள்ள பெரிய கடலின் நடுவிடத்தே புகுந்து பண்டொரு நாள் சூரபத்மனாகிய மாமரத்தை வெட்டி வீழ்த்திய முருகப்பெருமானின் அருளைப் பாடி ஆடுவதைக் காணலாம்.*

*“வானக வாழ்க்கை அமரர் தொழுது ஏத்தக்*
*கான நறுவேங்கைக் கீழானோர் காரிகையே*
*கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்*
*வாகை வாழ்க்கை மறுதரவோ வில்லாளே”*

*(மேலது, பா. 23)*

*வானுலகில் வாழும் தேவர்களும் கைதொழுது போற்றுமாறு நமது குறிஞ்சி நிலத்து வேங்கை மரத்தடியில் கைதொழுது போற்றுமாறு நமது குறிஞ்சி நிலத்து வேங்கை மரத்தடியில் தெய்வமாக ஒரு காரிகை எப்போதும் நின்றாள், அப்படி நின்றாளேனும் தன் கணவனுடன் வானுலக வாழ்வையும் நிலைப் பெற்றவளாவாள் என்று குரவைக் கூத்தாடினர்.*

*ஆய்ச்சியர் குரவை:*

*பழந்தமிழகத்தில் இடையர்குலப் பெண்களில் ஏழு முதல் பத்துவரை ஒன்று கூடி ஆடும் நடனத்தை ஆய்ச்சியர் குரவை என்று கூறுவர். மாதவி காவிரிப்பூம்பட்டினத்தில் கணிகையர் குலத்தில் பிறந்தவள். ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றிலும் சிறந்தவள். ஏழாண்டுகாலம் ஆடற்பயிற்சி பெற்றவள். சோழப் பேரரசன் முன்னிலையில் அவளது அரங்கேற்றம் நிகழ்ந்தது. ஆடல்கண்டுகளித்த மன்னன் தலைக்கோல் பட்டத்தையும் பசும்பொன் மாலையையும் அவளுக்கு பரிசு அளித்தான்.*

*ஆயர் சேரியில் பலவகை உற்பாதங்கள் நிகழ்ந்தன. மாதரி தன்மகள் ஐயையை நோக்கி முன்பு ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் பிள்ளையுடன் ஆடிய குரவையை நாம் இப்பொழுது குரவை கன்று துயர் நீங்குகவென ஆடுவோம் எனக் கூறி எழுவர் கன்னியரொருறுத்தி ஏழிசைகளின் பெயர்களாகிய குரல் முதலியவற்றை அவர்கட்குப் பெயர்களாக இட்டு, அவருள் குரலாகிய வளைக்கண்ணன் என்றும் கிளியாகியவளைப் பலராமன் என்றும் துத்தம் ஆகியவளைப் பிள்ளை என்றும் ஏனை நரம்புகளாகியோரை மற்ற நால்வர் என்றும் படைத்துக் கோட் பெயரிட, அவர்கள் கற்கடகக் கை கோத்து நின்று மாயோனைப் பாடி குரவையாடினர்.*

*“திரண்டமரர் தொழுதேத்தும் திருமால் நின் செங்கமல*
*இரண்டடியால் மூவுலகும் இருள் தீர நடந்தனையே*
*நடந்தபடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி*
*மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ மருட்கைத்தே”*

*(சிலம்பு, ஆய்ச்சியர் குரவை, முன்னிலைப் பரவல், பா.3)*

*அமரர் அனைவரும் கூடி வணங்கிப் போற்றும் திருமாலே! அன்று நீ உனது சிவந்த தாமரை மலர் போன்ற இரண்டு அடிகளால் மூன்று உலகங்களும் இருள் விலக நடந்தாய்! அவ்வாறு நடந்த திருவடிகள் பின்னர்ப் பாண்டவர்க்காகத் தூது நடந்த அடிகளாம்! நரசிங்கமாகிப் பகையை அழித்தோய். இஃது என்ன மாயமோ? மிகவும் வியப்பாக இருக்கிறதே! என்று திருமாலின்*

*வாமன அவதாரத்தையும் பாண்டவர்களுக்காகத் தூது சென்றதையும் கூறி குரவை கூத்து ஆடியதைக் காணமுடிகிறது.*

*அறியாமை தாங்கிய உள்ளத்தையுடைய மாமனாகிய கஞ்சன் செய்த வஞ்சகச் செயல்களை எல்லாம் வென்றவனை, நூற்றுவர் போல் நாற்றிசையும் போற்ற தன் முன்னே வேதங்கள் முழங்க பாண்டவர்க்காகத் தூது நடந்தனைப் போற்றாத நா, என்ன நாவோ? நாராயண எனக் கூறாத நா, என்ன நாவோ? என்று கூறி,*

*"கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்*
*ஆத்தலைப் பட்ட துயர் தீர்க்க வேத்தர்*
*மருள வைகல் வைகல் மாறட்டு*
*வெற்றி விளைப்பது மண்னோ கொற்றது*
*இடதப்படை வானவன் மூடித்தலை யுடைத்த*
*தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே"*

*(சிலம்பு, ஆய்ச்சியர் குரவை, படர்க்கைப் பரவல், பா.3)*

*குரவைக் கூத்துள் போற்றிய கடவுள் நம் பசுக்களுக்கு நேர்ந்த துன்பங்களை நீக்கிடுக! வெற்றி தரும் இழலைப் படையாக உடைய இந்திரனது முடியைத் தகர்த்த தொடி பொருந்திய தோளையுடைய பாண்டியனது குறுந்தடியில் எறியப்படும் முரசமானது வேற்றரசர் மருளும் வண்ணம் நாள் தோறும் பகைவர்களைக் கொன்று வெற்றியைத் தென்னனுக்கு அளித்து வழங்குவதாக! என்று ஆய்ச்சியர் குரவை ஆடியதை இதன் மூலம் அறியமுடிகிறது.*

*முடிவுரை:*

*ஆடற்கலை என்பது பாட்டையும் உள்ளக்குறிப்பையும் புறத்தே வெளிக்காட்டும் திறமையோடு மெய்ப்பாடுகள் தோன்ற காணப்படுவது ஆடற்கலையாகும். ஆடற்கலையை விறலியரும் கூத்தரும் சிறந்து விளங்கியதால் மன்னர்கள் பெரிதும் போற்றி வந்தனர். நாடகத்தை கதைத்தழவி வருவதை கூத்து என்று கூறுவது ஆடற்கலையின் சிறப்பு பற்றி அறியமுடிகிறது. நடனக் கலையைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியனின் இலக்கணத்தை தெளிவாக சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. மேலும் நாட்டியம் தொடங்கும் போது தண்டியத்தையும் நடன ஆசிரியரையும் வணங்கி தொடங்கும் முறையைக் காணமுடிகிறது. வேத்தியல், பொதுவியல் என்ற இருவகை நாட்டிய வகையும் அரங்கம் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதையும் சிலப்பதிகாரம் விளக்குகிறது. குரவை பெண்கள் பத்து பேர் சேர்ந்து ஆடும் கூத்து குரவைக் கூத்து என்றும், ஆய்ச்சியர் சேர்ந்து ஆடும் கூத்து ஆய்ச்சியர் குரவை என்பதையும் அறியமுடிகிறது.*

*துணைநூற்பட்டியல்:*

*1. அழகப்பன், ஆறு., தமிழ்ப்பேழை, திருவரசு புத்தக நிலையம், சென்னை, 2001.*
*2. செயபால், இரா., அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2004.*
*3. நாகராசன், வி., பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2004.*
*4. ஸ்ரீசந்திரன், ஜெ., சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், தமிழ் நிலையம், தியாகராய நகர், சென்னை, 2004.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********